Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 15-6-1985 சனிக்கிழமை (ஆனி 1 நம்மூரான் 25) முழக்கம் 130

## 20 ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் மருந்துகள் நேற்று வந்தன

அவசர தேவைக்கான இருபது ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் பலத்த பாதுகாப்புடன் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன. மூன்று தினங்களுக்கு முன்னர் விமான மூலம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட இவை, பாதுகாப்பு நிமித்தம் காங்கேசன்துறையில் வைக்கப்பட்டிருந்தன. அதேவேளை கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இரண்டு லொறி நிறைந்த அத்தியாவசிய மருந்துப் பொருட்களும் நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டது. இராணுவத்தினர் பேரதிய பாதுகாப்புடன் இவை களைக் கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

# அடுத்த வாரம் எதிர்க்கட்சிகளின் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள்

## தமிழ்க் கட்சிகளின் சில முக்கியஸ்தர்களும் கலந்து கொள்வர்; 'சென்னை' அங்கீகாரம்!

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக புதிதாக உருவாகி வரும் சூழ்நிலை பற்றி நாட்டின் பல்வேறு எதிர்க் கட்சிகளுக்கிடையே தனித் தனியாகவும், கூட்டாகவும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளின் சில முக்கியஸ்தர்களும் இப்பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவர் என தெரிகின்றது:

அமைச்சர் எஸ் தொண்டமான் இப்பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்காற்றலாமென்றும், கூட்டணிப்பிரமுகர்கள் இதில் பங்கு பற்ற 'சென்னை'யின் கட்சி உயர் பீடம் அங்கீகாரமளித்துள்ளதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து, சகல இடதுசாரிக் கட்சிகள் உட்பட, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி வரையான அனைத்துடனும் இப்பேச்சுவார்த்தைகள் தனியாகவும், கூட்டாகவும் பல சுற்றுக நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்தும் சிலர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள தலைநகர் செல்லலாமென்றும் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## குண்டுச் சத்தங்கள்

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்நகரில் நேற்

– 4ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா அட்டானி ஜெனரலுடன், சட்ட நிபுணர் குழு பேசும்

கொழும்பிலிருந்து நேற்றிரவு புறப்பட்ட அறு சட்ட அறிஞர்கள் குழு இந்தியாவின் அட்டானி ஜெனரலுடன் முக்கியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமென அறிவிக்கப்பட்டுள்ளது

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகள் எதுவும் இக்குழு ஈடுபடாது சட்ட நுணுக்கங்களை ஆராய்வதே இக்குழுவின் முக்கிய கடமையென பணிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சட்டசபை, அல்லது யூனியன் கவுன்ஸில்கள் அமைப்பது பற்றிய சட்டவரம்புகளைக் கண்டறிதே இக்குழுவின் கட்டாய பணியாகும்.

எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ. ஸி தலைமையில் புறப்பட்ட இக்குழு இன்று புதுடில்லி சென்றடையும்.

## யாழ். பஸ்களுக்கு கல்வீச்சு; அனேக பஸ்களும் வவுனியாவுடன் திரும்பம்

நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அனேகமான தனியார் பஸ்களும் வழியில் சரமாரியான கல்வீச்சுக்குள்ளாகின.

அதேவேளையில் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட அனேகமான பஸ்களும் தமது பயணத்தைத் தொடராமல் வவுனியாவுடன் திரும்பி வந்தன.

கொழும்பிலிருந்து வந்த பஸ்களுக்கு அனவை என்ற இடத்திலுள்ள பாலமொன்றிற்கு அருகில் கூட்டமாக நின்றவர்கள் கல் வீசியதாக சிறு காயத்திற்கு உள்ளான சாரதி ஒருவர் தெரிவித்தார். கெக்கிராவையிலும் கல் வீச்சு இடம் பெற்றதாம்.

இரண்டு பஸ்கள் இதனால் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இங்கிருந்து கொழும்பு சென்ற பஸ்களில் ஒன்றைத் தவிர மற்றைய அனைத்தும் அச்சம் காரணமாக யாழ்ப்பாணம் திரும்ப நேர்ந்தது.

## அமெரிக்க விமானம் கடத்தப்பட்டது

155 பயணிகளுடன் ரோமுக்குச் சென்று சென்று கொண்

—4-ஆம் பக்கம் பார்க்க

## 24 பயணிகளுடன் யாழ்தேவி கொழும்புக்குச் சென்றது

நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் யாழ்தேவி ரயில் நேற்று யாழ்ப்பாணம் வந்தது. சரியாக பகல் ஒன்று இருபத்தெட்டுக்கு இதுவந்து இரண்டு பத்துக்கு இங்கிருந்து கொழும்பிற்கு புறப்பட்டது.

நேற்று யாழ்தேவியில் சுமார் நூறுபேர்வந்தனர். இங்கிருந்து கொழும்பிற்கு இருபது பேரும், மட்டுநகருக்கு ஒருவரும், வவுனியாவுக்கு மூன்று பேருமாக மொத்தம் இருபத்துநான்கு பேர் பயணம் செய்தனர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் நேற்று ஒரிது கலகலப்பாக இருந்தது. தமது உறவினர்கள் வருவார்கள் என எதிர்பார்த்து பலர் புகையிரத நிலையத்தில் காத்திருந்தனர்;

துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள தற்காலிக புகையிரதப்பகுதி அலுவலகத்தில் பத்தொன்பதுபேர் பணம் செலு

...4 ஆம் பக்கம் பார்க்க

## 'ரெலோ' விடுத்துள்ள அறிக்கை:

## எமது நிலையிலிருந்து இம்மியளவும் விலகோம்; விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்!

எமது நிலையிருந்து இம்மியளவேனும் விலகமுற்படாது நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட இந் நெருக்கடியை எமக்குச் சாதகமாக்கி, தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோமென 'ரெலோ' விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது போராட்டம் இன்று சர்வதேச ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளைத் தகர்த்தெறியும் போராட்டமாக பரிணமித்து விட்டது. எனவே நாம் இன்று சர்வதேச ஏகாதிபத்தியங்களையும் அதன் பொதுச்சந்தைகளாக விளங்கும் தரகு முதலாளித்துவ அரசுகளையும் உடைத்தெறியும் பணியில் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றோம். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை இலகுபடுத்தக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நடவடிக்கைகளைச் சரியான முறையில் இனங்கண்டு கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியமானது அதன் பொதுச் சந்தையாக விளங்கும் அரசை போலித்தனமான அரசியல் தீர்விற்கு நிர்ப்பந்திக்கிறது.

## ராணுவ தொண்டர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம்

இராணுவத்தில் தொண்டர் உத்தியோகஸ்தர்களாகச் சேர்ந்து கொள்பவர்களை எதிர்காலத்தில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கான புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி 18க்கும் 26க்கும் இடைப்பட்ட வயதையுடைய பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம். கல்வி பொது சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களும் இதற்குவிண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் இராணுவத்தில் மூன்று முதல் ஏழு வருடகாலம் வரை சேவையாற்றவேண்டும். சிறந்த கட்டுப்பாடு உடைய சிறந்த தொண்டர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதே இதன் நோக்கம்.

## பாரதம் ஒருபக்கமும் சாரவில்லை

பாரதம் சோவியத் யூனியன் பக்கமோ அல்லது வேறு

... 4ஆம் பக்கம் பார்க்க

## சாதனை வீரர் பரீத் நஸீர் தாக்கப்பட்டதாக புகார்

(வண்ணார்பண்ணை)

ஆயுதம் தாங்கிய சில நபர்கள் சாதனைவீரன் பரீத்நஸீரை குருநகரிலுள்ள அவரது வேலைத்தளத்தில் வைத்து தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டிலிருந்து 84 வரைக்கும் சாதனை செய்தபோது 4 லட்சத்து 55 ஆயிரம் ரூபா சேர்த்ததாகவும் இவ்வளவு பணமும் பொது மக்களுடையது என்றும் தவணை முறையில் பணம் முழுவதையும் தருமாறும் தாக்கியவர்கள் அவரிடம் கேட்டனராம்;

நஸீரின் உடம்பின் பல இடங்களில் காயங்கள் காணப்பட்டன;

## திருமலையின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புக்குக் குறிப்பாகத் திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்புக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரஜமகாவிகாரைக்கு விசேட பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.


தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று முன்தினம் மேற்கொண்ட திருகோணமலை மாவட்ட விஜயத்தை அடுத்தே இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்ற இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டை இன்று எதிர் நோக்கும் நிலை குறித்து அமைச்சர் ஆயுதப்படை அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினர்.

## நெஞ்சம் திகைக்கும் அரியாலை
## செல்வபாலாவின் மர்மம்



இவர் வெளியேறிய போது அணிந்திருந்த "சேட்"



மிக அண்மையில் எடுத்த படம்

17 வயது சிறுவன் அரியாலை செல்வபாலா தந்தை முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டு ஒரு நொடியாவது முன் ஆயத்தமின்றி உடுத்த உடையுடன் 30.5.85 அன்று திடீரென மர்மமாகி விட்டார். சரியாக பின்னேரம் 3½ மணிக்கு தந்தையாரினால் புத்திமதி சொல்லப்பட்டவுடன் ஒரு நண்பரைக் காணப்போவதாக அனுமதி கேட்டு வெளியேறினார். அதே சமயம் இராணுவமும் அரியாலையை நோக்கிவர உடன் திருப்பித் தருவதாகக் கூறி எடுத்த இரவல் சய்க்கிள் ஒன்றில் அவர்கள் ஊடாக செல்லக் காணப்பட்டது மாத்திரம் தான் தெரியும். இராணுவத்தினரால் பிடிபட்டாரோ தற்கொலை செய்தாரோ தலைமறைவாக இருக்கிறாரோ வேறு சக்திகளால் மறைக்கப்பட்டுத் தத்தளிக்கிறாரோ அல்லது உயிருடன் இருக்கிறாரோ இல்லையோ ஒன்றுமே தெரியாது. ஐந்து சகோதரிகளைக் கொண்ட குடும்பத்திற்கு அச்சாணியாக அமைந்த ஒரேயொரு ஆண்பிள்ளை இவர். பாஸ்போட் எடுக்கும் தவிர்க்க முடியாத தாமதத்தினால் ஆண் பிள்ளைகளுக்கு நாட்டில் நேர்ந்துள்ள அபாய சூழ்நிலையிலிருந்து இவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக வெளிநாடு அனுப்புவதற்கு பெற்றோர் முயற்சித்துக் கொண்டிருக்கும் தறுவாயில் மர்மமாகி விட்டார். அகன்ற இனசன சூழவுள்ள குடும்பத்தில் எல்லோரும் அக்கறை காட்டிய மிக வயது குறைந்த ஆ. மைச் சிறுவன் இவர். ஆகவே இவர் உயிருடன் இருந்தால் தனக்குள்ள பிரகாசமான எதிர்காலத்தை இத்தகைய துரும்பைப் போன்ற பிழைவிடும் மறைவினால் நாசமாக்குவதை உணராத இவர் எவர் கண்களிலும் தென்பட்டால் வாழ்க்கையின் உண்மையையும் குடும்பப் பொறுப்பையும் உணர்த்தி உடன் வீடு திரும்பச் செய்யுமாறு வேட்கின்றோம். இவரைக் கண்டுபிடித்து எம்மிடம் ஒப்படைப்பவரைக் கடவுள் போல் கணிப்போம். அத்துடன் பிடித்துத் தருவோருக்கு நன்றிக் கடன் சின்னமாக 1000/-உம் வழங்குவோம். பெற்றோர், சகோதரிகள் படும் வேதனையை உணர்த்த சொற்களில்லை.

தகவல் தரும் முகவரி — செ. பாலசுப்பிரமணியம்
ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையடி
204, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

நெடுந்தீவு
செல்வன் குமாரசாமி விநாயகமூர்த்தி
அவர்களின்
## 31ம் நாள் நினைவாக



அவனியில் பிறப்பு 06-01-58 ஆள்பவன் பறிப்பு: 15-5-85

அன்னையின் அரவணைப்பில்
அன்புடன் வளர்ந்து பின்னர்
அன்னைக்கே பாலை யூட்டி
அவளினைத் தேற்றற்காக
மண்ணினில் பிறந்தசயென்று
மற்றவர் சொல்லும் காலை
அந்நியர் கையால் அன்று
அலை கடல் தன்னில் நீயும்
மண்ணுக்காய் உயிரை நீத்த
மாட்சியை மறக்கலாமோ

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், அத்தான், அக்கா,
மருமக்கள், அண்ணர், அண்ணி, மயூரன்,
மற்றும் உறவினர்கள்.

## வேத ஞான விரிவுரைகள்
(நல்லூர்)

வேதாகம ஆராய்ச்சி நிலையத்தின் ஆதரவில் யாழ் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் இன்று சனிக்கிழமை முதல் 21ம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலையில் வேத ஞான தொடர் விரிவுரைகள் நடாத்தப்படவிருக்கின்றன.

வேதாகம ஆராய்ச்சி நிலைய யாழ். செயலாளர் திரு. ஸ்ரீ. கே. ஜெயராசா இதனை நிகழ்த்துவார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆங்கில பிரிவின் உதவி விரிவுரையாளர் திரு. எஸ். கனகராசா இதனை ஆரம்பித்து வைப்பார்.





✲ காங்கேசன்துறை அன்ரன் தனநாயகம் அனுபாமிலா தம்பதிகளின் மகன் யூஜின் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ பாஷையூர் வீரக்கோன் பபி தம்பதிகளின் மகள் ருசாந்தினி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ தேவிபுரம் பொன்னையா சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் அருணகிரிநாதன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ கோண்டாவில் வடக்கு கணேஷ் சுசீலாதேவி தம்பதிகளின் மகள் கவிதா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ யாழ் நாச்சிமார் கோவில் வீதி குமாரசாமி இராஜேஸ்வரி தம்பதிகளின் மகள் சோபனு இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✲ சுன்னாகம் சந்தை வளவு செல்வநாயகம் ஸ்ரீரதி தம்பதிகளின் மகன் பிரதா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✲ யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த சின்னராசா நாகேஸ்வரி தம்பதிகளின் மகன் அனுஷந்தன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## யாழ். மாவட்ட வருடாந்த மெய்வல்லுனர் போட்டி

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்தப்படும் மெய்வல்லுனர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. எம். பஞ்சலிங்கம் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆண்களுக்கிடையேயான போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே நல்லூர், வேலணை, சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பெற்றன.

பெண்களுக்கான போட்டிகளில் யாழ்ப்பாணம், வேலணை, உடுவில் பிரிவுகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.

வேலணைப் பிரிவைச் சேர்ந்த திரு. கே. சண்முகம்பிள்ளையும், யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த செல்வி ரீ. பி சோமசேகரமும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களைப் பெற்றார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அங்கு உரையாற்றுகையில் யாழ். மாவட்டத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையிலும் இப்போட்டிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளதென்று பாராட்டினார்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் சிறுவர்கள் மைதான ஒழுங்குகளை மேற்கொண்டார்கள். திருமதி ஜீ. பஞ்சலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

## விசேஷ கூட்டம்
(உடுப்பிட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குரிய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவுகளுக்கான விசேட கூட்டம் இன்று 15-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

## முத்துமாரி ஆலய உற்சவம்

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் பதினாறும் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். 24 ம் திகதி திங்கள் தேர்த் திருவிழாவும், 25-ம் திகதி செவ்வாய் தீர்த்தமும் இடம்பெறும்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சாரணர்கள் இன்றும் நாளையும் யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்க வளவினை துப்புரவு செய்வதன் மூலம் சிரமதானத்தை மேற்கொள்ள இருக்கின்றார்கள். சாரண ஆசிரியர்களான பி. சிறிகரன், எஸ். சந்திரமௌலீசன் ஆகியோரின் கீழ் இச்சிரமதானம் நடைபெறவுள்ளது. இதில் அணித் தலைவர்களும் அணி அங்கத்தவர்களும் கலந்து கொள்வர்.


Eurolanka Travels Ltd.

40, 8 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(குறிப்பு : யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில்)

கொழும்பு/பேர்லின் சேவை

யூன் (June) 24 ஆம், யூலை (July) 1ஆம், 8 ஆம் திகதிகளில் குறைந்த கட்டணத்துடன் விசேஷ சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மெட்ராஸ், திருச்சி, சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் இடங்களுக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

(1) பின்வரும் சேவைகள் மிகக் குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
(a) கொழும்பில் திறமையான ஹோட்டலில் தங்குமிட வசதி.
(b) கொழும்பு—கட்டுநாயக்கா போக்குவரத்துச் சேவை
(c) யாழ்—கொழும்பு பஸ் சேவைகள்.
(2) வேறு சேவைகள்:- (a) காசோலைகள் இலவசமாக எடுத்துக் கொடுத்தல்.
(b) பேர்லின் போகும் பிரயாணிகளுடன் எமது பிரதிநிதி Bangkok வரையும் சென்று எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்.
(c) BONDING, PASSPORT முதலியன, துரித கதியில் பெற்றுக் கொடுத்தல்,

கிளைகள்:-
(1) சிவன் மாளிகை லிமிட்டெட் 166, (80) K.K.S. ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி : 23837
(2) ஸ்ரீமகால் ட்றேடீஸ் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23572
(3) CANTABIA LTD. 21, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 24201

தலைமை அலுவலகம்:
EUROLANKA TRAVELS LTD.
6A, DAISY VILLA AVENUE, COLOMBO - 4.
தொலைபேசி: 585990, 589992


## வரி விளம்பரம்

### ஏலவிற்பனை

176/1, பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் வீட்டுத் தளபாடங்கள், மற்றும் பாவனைப் பொருட்கள் அனைத்தும் 15-6-85 — 16-6-85 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 10 மணிக்கு ஏலவிற்பனை நடைபெறும். மேலும் விபரங்களுக்கு: S. ஜெயராஜா 117, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

நுணுவிலைச் சேர்ந்த A. ராஜேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டை சாவகச்சேரிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து சாவகச்சேரி அம்பாள் பார்மஸியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

### ஏலவிற்பனை

இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி சந்தைக் கட்டிடத்தில் காலையிலிருந்து பலவித பொருட்கள் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்களையும் அனுப்பி வைக்கலாம். ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உதய சிந்தனை

சேனைக்கு அழகு யானைப்படை; பெண்ணிற்கு அழகு மெல்லிய இடை: நல்லவர்களுக்கு அழகு சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது.
-- விவேக சிந்தாமணி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

15 6-1985 சனிக்கிழமை (குரோதன ஆனி 1)

# நீண்ட காலமாக எதிர்பார்த்த சகுனம்

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தமது நான்கு நாடுகளின் விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை தாயகம் திரும்பவுள்ளார்.

சென்றவிடமெங்கும் இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினையை அவர் தொட்டுப் பேசாமல் விடவில்லை.

இலங்கை ஜனாதிபதியுடன் அண்மையில் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகள் தமக்குப் பூரண நம்பிக்கையை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குச் சுமுகமான, அனைவரும் ஏற்கும் அரசியல் தீர்வொன்றைக் காணமுடியுமென்ற நிச்சயமான நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் பிரதமர் ராஜீவ் காந்தி அனைத்து இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸிலிருந்து அமெரிக்கா வரை, ஒருநாள் அல்ஜீரிய விஜயத்தின் போதும்கூட, இலங்கைத் தமிழர் பிரச்சினை மீது அவர் தெரிவித்த கருத்துக்கள், வெறுமனே தமக்குள்ள ஈடுபாட்டையும், நம்பிக்கையையும் வெளிக்காட்டியதாக மட்டும் கருதக்கூடியதல்ல.

இந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம், இலங்கைப் பிரச்சினையை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவர, மிகவும் மதிநுட்பமாக, மெச்சத்தக்க ராஜதந்திரத்துடன் அவர் பயன்படுத்தியுள்ளதாகவே நாம் எடுக்க வேண்டும்.

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கப்போவதை எவ்வாறு முக்கியத்துவம் கொடுத்து, தமது ஒவ்வொரு விஜயத்தின் போதும் குறிப்பிட்டுச் சொன்னாரோ, அதேயளவு முக்கியத்துவத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கும் பாரதப் பிரதமர் கொடுத்தாரென்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவுக்குள் அடைக்கலம் புகுந்திருப்பதைத் தனது பிரசாரத்துக்கு ஆயுதமாக ராஜீவ் காந்தி இம்முறை பயன்படுத்தவில்லை.

தொடர்ந்தும் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு வருவதைப் புள்ளிவிபரங்களுடன், தேசப்பட விளக்கத்துடன் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அல்ஜீரியாவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இலங்கையிலுள்ள பாரதத் தூதுவரிடம் தாம்பெற்ற திருமலை, மூதூர்ச் சம்பவ விபரங்களை தேவையேற்பட்ட வேளைகளில் வாஷிங்டனில் சமர்ப்பிக்க அவர் துணிவு கொண்டிருந்தார்.

மொத்தத்தில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உலகப் பிரசாரத்தைச் சரியான ஒரு கருவியாகப் பயன்படுத்திய பாரதப் பிரதமரின் அரசியல் உச்ச தந்திரமே, இலங்கை தாமதமற்ற நடவடிக்கைகளைச் சூட்டோடு சூடாக எடுக்க உதவியது என்று நம்ப இடமளிக்கின்றது.

பிரதமர் நாடு திரும்புவதற்கு இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னதாக, இலங்கையின் சட்ட அறிஞர் குழு புதுடில்லி விரைந்துள்ள முயற்சி, ராஜீவின் வெளியுலக பிரசாரத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றியெனக் கருத இடமளிக்கின்றது.

ஏற்கனவே ஜனாதிபதியின் விசேஷ தூதராகப் பாரதம் சென்று பேச்சுக்கள் நடத்திய அவரது இளைய சகோதரரான, இராணி அப்புக்காத்து எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா தலைமையிலான அறுவர் குழு, உச்சி மாநாட்டு முடிவுகளைச் செயற்படுத்துவதற்கான ஆவணங்களின் சட்டதிட்டங்களைத் தயாரிக்கவே பாரத விஜயத்தை மேற்கொண்டுள்ளது.

அதேவேளையில், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரான திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா விரைவில் தமிழக விஜயத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்., தமிழகத்திலுள்ள தமிழர் கூட்டணித் தலைவர்கள் ஆகியோருடன், இனப் பிரச்சினைத் தீர்வு யோசனைகள் பற்றி நேரடியாகப் பேசுவதே இவரது விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

தீர்வு கனிந்துவரும் இவ்வேளையில் இரு பகுதியினரதும் 'போர் நிறுத்த' நிபந்தனையும், பத்திரிகைத் தணிக்கை நீக்கமும், வட பகுதியிலுள்ள சகல சிறுடையினரையும் பலாலி முகாமுக்கு மாற்றிவிட்டு, மற்றைய முகாம்களை மூடிவிடுவதற்காகவும் அரசாங்கம் நடத்தும் ஆலோசனைகள், மிகவிரைவில் நல்லதொரு தீர்வைக் காண ஏற்படுத்தப்படும் வரவேற்கக் கூடிய சூழ்நிலையாகும்.

நீண்டகாலமாக எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட நல்ல சகுனம் இதுவே.

★ அமெரிக்கப் பாராளுமன்ற உரையில் ராஜீவ்

# ராணுவத்தள விஸ்தரிப்பு: பாரதத்துக்கு பீதி, சந்தேகம்

(வாஷிங்டன்)

''உலகின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டுவருவது குறித்து பாரதம் அச்சமும், ஐயப்பாடும் அடைகிறது'' என்று பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி அமெரிக்கப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார். செனட் சபை உறுப்பினர்களும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்ட கலப்புக் கூட்டத்தில் திரு. காந்தியின் முக்கியத்துவமிக்க இவ்வுரை இடம்பெற்றது. 'இந்துமாகடலில் அதிகரித்து வரும் இராணுவ நடமாட்டமும், அண்டை நாடுகளில் இடம்பெற்றுவரும் பெருமளவிலான ஆயுதக் குவிப்புகளும் பாரதத்தை நேரடியாகவே பாதிக்கின்றன என்று திரு. காந்தி எடுத்துரைத்தார். பாரதத்தின் பசுமைப் புரட்சிக்கு அமெரிக்கா அளித்து வரும் விஞ்ஞான, தொழில் நுட்ப உதவிகளுக்காகப் பாரத மக்கள் என்றென்றும் நன்றியுடனிருப்பர் எனறும் அவர் சொன்னார்.

பாரதம் தனது பொருளாதாரத்துறையைப் பொறுத்த வரையில் அறுபது வீதத்தை விவசாய அடிப்படையிலேயே கொண்டுள்ளது என்று திரு. காந்தி தனதுரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை திரு. காந்தி அளித்த பேட்டி ஒன்றில் ''அமெரிக்காவுக்கும், பாரதத்துக்கும்இடையே நட்புறவுமேலும் மேம்பட வாய்ப்புகள் உண்டு'' என்று சொன்னார். ''பாரத விடயங்களில் அமெரிக்கா அனுகூலமான நிலை கொண்டுள்ளது. பாரதத்தை அமெரிக்கா நன்கு புரிந்து கொண்டுள்ளது'' என்றும் திரு. காந்தி சொன்னார்.

மற்றோர் நிகழ்ச்சியில் அவர் பேசும் போது, ஜனாதிபதி திரு. றீகன் மீது தனது தாயார் திருமதி இந்திரா காந்தி அளவு கடந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார் என்று தெரிவித்தார்.

## அமெரிக்கா எதிர்ப்பு

(வாஷிங்டன்)

நமீபியாவில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்ற தென்னாபிரிக்க ஜனாதிபதி திரு. போதாவின் திட்டத்தை அமெரிக்கா மீண்டும் எதிர்த்துள்ளது.

மத்திய மந்திரி பந்த் புகழாரம்

# எம். ஜி. ஆர். தேசத்திற்காக அரும்பணி ஆற்றி வருகிறார்

(சென்னை)

''தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நாட்டுக்காகவும், தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும் அரும்



பணியாற்றி வருகிறார்'' என்று மத்திய கல்வியமைச்சர் திரு. கே. ஸி. பந்த் புகழாரம் சூட்டினார்.

சென்னையில் நடைபெற்ற கல்வி நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்விதம் புகழ்ந்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

''புதிய கல்விக் கொள்கையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்'' என்றும் மத்திய அமைச்சர் சொன்னார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஐம்பத்திரண்டாவது வருடாந்தப் பட்டமளிப்பு விழாவிலும் அமைச்சர் கலந்து கொண்டார்.

## ★ சைக்கிளில் உலகம் சுற்றும் ★ தமிழ் வாலிபன்

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்ற வாலிபர் சைக்கிளில் உலகம் சுற்றும் தனது பயணத்தை சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்தார். நூற்றெட்டு நாடுகளுக்குச் செலத் தீர்மானித்துள்ள அவர் 1989ம் வருடத்தில் தாயகம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 1983, 1984ம் வருடங்களில் அவர் பாரதத்தில் இருபத்திரண்டாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டுக் கிலோமீட்டர் தொலைவு சைக்கிளில் சுற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கிய தாக்குதல்கள்: எண்மர் கொலை; பலர் காயம்

(பாக்தாத்)

ஈராக், ஈரான் தலைநகரான தெஹ்ரானைச் சுற்றியுள்ள மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய கோரத் தாக்குதல்களில் எண்மர் கொல்லப்பட்டனர். முப்பது பேர் காயமடைந்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

ஈரான் இதற்கு எவ்விதத்தில் பதிலடி கொடுத்தது என்பது பற்றியவிவரம் கிடைக்கவில்லை.

# பாக். - ஆப்கான். மந்திரிகள் ஜெனீவாவில் சந்திப்பர்!

(ஜெனீவா)

ஆப்கானிஸ்தானினதும், பாகிஸ்தானினதும் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகள் இம் மாதம் இருபதாம் திகதி ஜெனீவாவில் நடைபெறும்.

ஐக்கிய நாடுகள் சபை அதிகாரியும் இச் சந்திப்பின் போது சமுகமளித்திருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கங்கா மினி தியேட்டர்
நாச்சிமார் கோயிலடி
(சாந்தி அச்சகம்)
15-6-85 முதல்
காலை 10-30 — பி.ப. 2-15
※ சிவாஜி ※ பிரபு
※ ஊர்வசி நடித்த
நாம் இருவர்
பி.ப. 4-45
CHALLENGE OF THE NINJA
கராட்டி - ஆங்கிலம்

# பாரத இசையில் றீகன் தம்பதி பரவசம்

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் நடைபெற்ற பாரதத் திருவிழா நிகழ்ச்சிகளைப் பார்வையிடவந்த அமெரிக்க ஜனாதிபதி தம்பதிகள் பாரதத்தவரின் தாளவாத்திய இசையில் தம்மை மறந்து இறும்பூதெய்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி சில விடயங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களைத் திருமதி றீகனுக்கு விளக்கினார். இந் நிகழ்ச்சியில் கேரள கதகளி நடனமும் சிறப்பம்சமாக இடம் பெற்றது.

கனடா பிரயாணம்

கனடாவுக்கு விசாவுடன் பிரயாண ஒழுங்கும், பாஸ்போர்ட், பொன்ட் என்பனவும் செய்து தரப்படும்.

இம் மாதம் 19ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்:
எஸ். கே. மகேந்திரன் (சட்டத்தரணி)
''சிவகஜநிதி''
24,2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24031

ஈழமுரசு

## யாழ். நோக்கி வந்த பஸ் ஆனையிறவில் திருப்பப்பட்டுசோதனை

(கிளிநொச்சி)

நேற்றுக்காலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஆனையிறவு இராணுவத்தினரால் மீண்டும் கிளிநொச்சிக்கே திருப்பிக் கொண்டு செல்லப்பட்டது. காலை எட்டுமணிக்கு பிரயாணிகளுடன் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த பஸ் ஆனையிறவில் மறிக்கப்பட்டு இராணுவத்தினர் கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டு முகாமுக்குச் செல்வதற்காக பிரயாணிகளுடன் ஏறிவந்தனர். பின்னர் இந்த பஸ் பகல் பன்னிரண்டு மணிக்கே யாழ்நகர் வந்து சேர்ந்தது. சம்பவத்தின்போது பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் மிகுந்த பதற்றமடைந்தனர், காலையில் அலுவலகங்களுக்கு செல்ல வந்த ஊழியர்களும் அவசர பிரயாணம் மேற்கொண்டவர்களும் சிரமத்துக்குள்ளானினர்,

பிரதமரின் பகிரங்க அறிவிப்பு:

# இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு

# எவருடனும் பேச அரசாங்கம் தயார் நிலையில்!

(கொழும்பு)

''நாட்டை இன்று எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் எவருடனும் பேசத் தயாராக இருக்கிறது'' என்று பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ கூறியிருக்கிறார்.

''நாம் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக்கிறோம் என்பதை எவரும் நம் பலவீனத்தினால்தான் இவ்விதம் நடந்து கொள்கிறோமென்று தவறாக நினைக்கக் கூடாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

கொலன்னா தொகுதியில் திருத்தியமைக்கப்பட்ட இன்னுமொரு கிராமத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்த பின் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''எமது நாட்டு மக்கள் எமது தாய் நாட்டின் உரிமையாளர்கள், இதற்குச் சில சக்திகளிடமிருந்து அச்சுறுத்தல் எழுந்த போதிலும் அரசாங்கம் அந்த முயற்சிகள் வெற்றியளிக்க இடமளிக்கப் போவதில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பயங்கரவாதப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றினைக் காணக்கூடியதாக இருக்கும்'' என்றும் பிரதம மந்திரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வண. ஓம்லோ அடிகளின் உருக்கமான வேண்டுகோள்:

## தள்ளாத வயதில் தவிக்கிறேன்; வீடு வீடாக பெற்ற நிதியில் வாங்கிய ஜீப்; திருப்பி தருக!

கடந்தமாதம் பதினாறும் திகதி பரந்தன் பங்குத்தந்தை வண. பிதா. சீ. எம். ஓம்லோ அடிகளின் 'மிற்சுபிசி' ஜீப்பை இனம் தெரியாத சிலர் நான்கு மணித்தியாலங்களில் திருப்பித் தருவதாகக் கூறி எடுத்துச் சென்றும் இதுவரை அதைத் திருப்பிக் கொடுக்காததினால் மீண்டும் அதை தருமாறு வண. ஓம்லோ அடிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது வேண்டுகோளில்' தனது சொந்த இடமாகிய ஒல்லாந்து தேசத்தை விட்டு வந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக இங்கு ஆத்மீக சமூக சேவைகள் புரிவதாகவும் தனது நாட்டில் வீடு, வீடாகச் சேகரித்த பணத்தைக் கொண்டே இந்த ஜீப் தமக்கு அன்பளிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

வாகனமின்றி தள்ளாத வயதில் தம்மால் சேவைகள் செய்யமுடியவில்லை எனவும் இதை எடுத்தவர்களோ பொது நல சேவையை விரும்புகிறவர்களோ அந்த ஜீப்பை மீளவும் தமக்கு கிடைக்க உதவி செய்யுமாறு கருணையுடன் வேண்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## நாளை பெருவிழா

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு திருப்பலியுடனும் திருச்சொருப பவனியுடனும் நிறைவுபெறும்.

## அமெரிக்க விமா....

...1ஆம் பக்கத் தொடர்

டிருந்த அமெரிக்கஎயர்லைனர் விமானம் கடத்திச் செல்லப்பட்டதாகவும், பெய்ரூட் விமானநிலையத்தில் பெண்களும் குழந்தைகளுமாக 25 பேர் இறக்கப்பட்ட பின்னர் அல்ஜீரியா சென்று இறங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 24 பயணிகளுடன்....

— 1ஆம் பக்கத் தொடர்

த்தி, புகையிரத நிலையத்தில் டிக்கட் எடுத்தனர். அங்கு பலத்த காவல் போடப்பட்டிருந்தது. துரையப்பா விளையாட்டரங்கு அலுவலகம் தினமும் காலை ஒன்பதரை மணி முதல் பகல் ஒன்று நாற்பதைந்து மணிவரை திறந்திருக்கும் என புகையிரதப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

ஆசனப் பதிவுகள், ரிக்கற் பதிவுகள் நடைபெறமாட்டாது. என்றும் பிரயாணம் செய்யும் தினமே பணம் செலுத்தி ரிக்கற் பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


தரமான

தங்க - வைர நகைகளை



எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## முதலுதவி சிகிச்சை முகாம்

(மிருசுவில்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் முதலுதவி சிகிச்சை முகாம் ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டது. உசன், மிருசுவில் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி முகாமில் உயர்தர வகுப்புகளைச் சேர்ந்த சுமார் எழுபத்தைந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்புகளை டாக்டர் காசிநாதன் தம்பிஐயா நடாத்தினார்.

பயிற்சியில் தேறியவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கென நலன் விரும்பிகள் சிலரால் முதலுதவிப் பெட்டியொன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## பஞ்சாயசபை புரிந்த சாதனை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் 175 வழக்குகள் பஞ்சாய சபையொன்றினால்விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. இம்மகத்தான சாதனையைப் புங்குடுதீவு 9ம், 10ம் வட்டாரங்களுக்கான பஞ்சாய சபை நிலைநாட்டியுள்ளது.

இச்சபையின் இச்சாதனையைப் பாராட்டும் வகையில் திங்கட்கிழமை மாலை பாராட்டுவைபவமொன்றும் நடைபெற்றது. இப்பஞ்சாய சபையின் சாதனையினைப் பெரிதும் பாராட்டிப் பலபிரமுகர்கள் உரையாற்றினர். திரு. அக்குழந்தைவேலு தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

நாயாறு, கொக்கிளாய்

## மீனவர்களுக்கு புத்தளம் திருமலை குடியிருப்பு வசதி

(நீர்கொழும்பு)

தற்போது சேம நல முகாம்களிலுள்ள மீனவர் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது,

நாயாறு, கொக்கிளாய் ஆகிய கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டதும் மீனவர் குடும்பங்கள் அங்கு மீண்டும் குடியமர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் ஒரு பகுதியினர் புத்தளம் மாவட்டத்தில் தற்காலிக வீடுகள் அமைக்க அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. மீன் பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒரு பகுதி மீனவர்கள் திருகோணமலைப் பகுதிக்கு அனுப்பப்படுவர்.

## ஜனாதிபதியின் மருத்துவராக தமிழர்

(புதுடில்லி)

ஜனாதிபதி திரு. ஜெயில்சிங்கின் மருத்துவராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த மருத்துவநிபுணர் ஜெகதீசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்தியப் பத்திரிகைகள் பாராட்டு

(புதுடில்லி)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவுக்கும், பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கும் இடையே சமீபத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் குறித்து அநேகமாக எல்லா இந்தியப் பத்திரிகைகளும் ஆசிரியத் தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

'ஸ்டேட்ஸ்மென்'பத்திரிகை திரு. காந்தி தென்கிழக்காசிய நாடுகளின் ஒருமைப் பாட்டுக்காகத் தான் அயராது உழைக்கத் தயாராக இருப்பதை இலங்கை ஜனாதிபதியுடன் அந்நாட்டின் இனப் பிரச்சினை குறித்து ஆக்க பூர்வமான தீர்மானம் எடுத்திருப்பதை வரவேற்கத்தக்கது எனப் பாராட்டியுள்ளது.

## குண்டுச் சத்தம் .!.

— 1ஆம் பக்கத் தொடர்

திரவு பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்டன. கட்டடங்களை அதிர வைக்கும் வகையில் சுமார் 8-15 மணியளவில் கேட்ட குண்டு வெடிச் சத்தத்துடன், நள்ளிரவு வரை தொடர்ச்சியாக சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. நகரின் பல பாகத்திலிருந்தும் இச்சத்தங்கள் கிளம்பின.

## கண்ணதாசன் மணிமண்டபம்

(சென்னை)

காரைக் குடியில் கவியரசு கண்ணதாசனுக்கு மணிமண்டபம் ஒன்றினை அமைக்கத் தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளது.

## திருச்சபை வாகனம் கடத்தல்

(கிளிநொச்சி)

தென்னிந்திய திருச்சபைக்குச் சொந்தமான வாகனமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச்செல்லப்பட்டது.

அக்கராயன் குளத்திலுள்ள அகதிகள் முகாமுக்கு உணவுப்பொருட்கள் ஏற்றிச் சென்று திரும்பி வரும் வழியிலேயே இக்கடத்தல் நடைபெற்றது' இது சம்பந்தமாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## திரும்பிவந்தால் வழக்கு இல்லை

பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கை திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்கள் எவ்வித துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப் படமாட்டார்கள் எனவும் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி ஜெயவர்தன இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ட்ருவெட்டிடம் உறுதியளித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## பாரதம்:..

... 1ஆம் பக்கத் தொடர்

எந்தப் பக்கமோ சாரவில்லை என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளனர்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 15.6.1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, தொலைபேசி: 23336